# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, சான்றுப்படுத்தப் பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகச் சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009, ஏப்பிறல் மாதம் 24 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** *II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்*

***விலை : ரூபா 26.00*** ***தபாற் செலவு : ரூபா 7.50***

## *2009 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, சான்றுப்படுத்தப் பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகச் சட்டம்*

[*2009 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ. ஓ 46/2006*

***சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகத்தையும் அதன் அலுவல்களை முகாமை செய்வதற்குப் பொறுப்பாக இருக்கவேண்டிய நிறுவனத்தின் பேரவையொன் றையும் தாபிப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும் ; நிறுவகத்தின் உறுப்பினர்களைப் பதிவுசெய்வதற்கு ஏற்பாடுசெய்வதற்கும் நிறுவகத்தின் உறுப்பினர்களால் உயர்தொழில்சார் நியமங்க ளையும் ஒழுக்காற்றையும் பேணுவதற்கும் ஏற்பாடுசெய்வதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடை நேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடுசெய்வதற்குமான தொரு சட்டம்***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

***1.*** *இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.* *சுருக்கப் பெயர்.*

### *பாகம் I*

### ***சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் அதன் நிறுவகத்தை அமைத்து உருவாக்குதலும் குறிக்கோள் களும் தத்துவங்களும்***

*சான்றுப் படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகத்தைத் தாபித்தல்.*

***2.*** *(1) அப்போதைக்கு (123 ஆம் அத்தியாயமான) சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட சான்றுப்படுத் தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் சங்கத்தின் உறுப்பினர்களாயிருக்கும் ஆட்களைக் கொண்ட "சான்றுப்படுத் தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகம்" என அழைக்கப்படவேண்டிய நிறுவகமொன்று (இதனகத்துப் பின் னர் "நிறுவகம்" என அழைக்கப்படும்) தாபிக்கப்படுதல் வேண்டும்.*

*(2) நிறுவகம் (1) ஆம் உட்பிரிவால் அதற்குக் குறித்தொதுக் கப்பட்ட பெயரால் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன் இடையறாத வழியுரிமையும் பொது இலச்சினையொன்றையும் உடையதாதலும் வேண்டும். அத்துடன் அத்தகைய பெயரில் வழக்குத்தொடரலாம் என்பதுடன் அதற் கெதிராக வழக்குத் தொடரவும்படலாம்.*

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** நிறுவகம் எந்தப் பொதுக் குறிக்கோள்களுக்காக அமைத்து உருவாக்கப்படுகின்றதோ அந்தப் பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) முகாமைத்துவக் கணக்காளர்களுக்கு உயர்தொழிசார் ஒழுங்கமைப்பொன்றுக்கு ஏற்பாடு செய்தல் ;

(ஆ) முகாமைத்துவக் கணக்கியலின் கற்கையை ஊக்குவித்தலும் அபிவிருத்திசெய்தலும் ; முகாமைத்துவக் கணக்கியல் நியமங்களைத் தாபித்தலும் வெளியிடுதலும் அத்துடன் முகாமைத்துவக் கணக்கியலின் சரியான கோட்பாடுகளினதும் நுட்பங்களினதும் தொழில்முறைகளினதும் பிரயோகத்தை ஊக்குவித்தலும் ;

(இ) முகாமைத்துவக் கணக்கியலின் உயர்தொழிலை அதன் தொழில்முறையில் கைத்தொழில், வர்த்தகம், கல்வி, நிதி, பகிரங்கச் சேவை அத்துடன் தகவல் தொழில்நுட்பவியல் ஆகிய துறைகளுக்கு ஊக்குவிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ;

(ஈ) உயர்தொழில்சார் முகாமைத்துவக் கணக்கீட்டுத் தகைமைக்கு இட்டுச்செல்லும் சான்றுப்படுத்தப்பட்ட முகாமைத்துவக் கணக்கீட்டு நிகழ்ச்சித் திட்டமொன்றை நடாத்துதலும் அத்தகைய ஒரு தகைமையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்தலும் ;

(உ) முதுமாணி மற்றும் கலாநிதி மட்டங்களிலுள்ள உறுப்பினர்களின் உயர்தொழில்சார் அபிவிருத்திக்கென முகாமைத்துவக் கணக்கீட்டு பின்னுறு தகைமைக்கு ஏற்பாடு செய்தல் ;

(ஊ) நிறுவகத்தின் உறுப்பாண்மைக்கான உறுப்பினரின் அனுமதிப்பைக் கண்காணித்தல் ;

(எ) முகாமைத்துவக் கணக்கியலில் தகைமை பெறுவதில் ஆர்வமுள்ள ஆட்களின் உயர்தொழில்சார் கல்வியையும் செயல்முறைப் பயிற்சியையும் பொறுப்பேற்றலும் ஒழுங்குபடுத்துதலும் மாணவர்களால் கடைப்பிடிக்கப் படவேண்டிய செயல்முறைப்பயிற்சி செயற்திட்டம் ஒன்றை அங்கீகரித்தலும் ;

(ஏ) கல்வி, பயிற்சி மற்றும் பரீட்சை என்பன தொடர்பில் அதன் பணிகளை கருத்திற்கொண்டு நிறுவகத்தால் நடாத்தப்படும் கற்கை நெறிகளை விதித்துரைத்தலும் அங்கீகரித்தலும் ;

(ஐ) தேவைப்படுத்தப்பட்ட உயர்தொழில்சார் தகைமைகளை அளிப்பதற்கு பரீட்சைகளை நடத்துதலும் அங்கீகரிக்கப் பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உயர்தொழில்சார் மற்றும் கல்வி நிறுவனங்களில் கற்கைகளை ஊக்கு விப்பதற்கு அத்தகைய நிறுவனங்களுடன் ஒருங்கி ணைந்து செயலாற்றுதலும் நிறுவகத்தின் உறுப்பினர் களுக்கு முகாமைத்துவக் கணக்கியல் துறையில் விலக்களிப்பும் அங்கீகாரமும் பெறுதலும் ;

(ஒ) பல்கலைக் கழகங்களிலும் வேறு உயர்கல்வி நிறுவனங் களிலும் முகாமைத்துவக் கணக்கியல் கற்கையை ஊக்கு வித்தலும் அதில் ஒருங்கிணைந்து செயலாற்றுதலும் துணைபுரிதலும் ;

(ஓ) நிறுவகத்திற்கான உறுப்பாண்மைக்கு ஏற்புடைத்தான தகைமைகளையும் தகைமையீனங்களையும் விதித் துரைத்தலும் நிறுவகத்தின் உறுப்பினர்களுக்கு உயர் தொழில்நடத்தை மற்றும் ஒழுக்கநெறி நியமங்களைத் தாபித்தலும் ;

(ஔ) உறுப்பினர்களின் நலனுக்காகத் தொடர்ந்துறும் உயர் தொழில்சார் கல்வியை ஒழுங்குசெய்தலும், மேற்பார்வை செய்தலும் அத்துடன் ஒழுங்குபடுத்துத லும் ;

(க) உறுப்பினர்களினதும் மாணவர்களினதும் முகாமைத் துவக் கணக்கியலில் அக்கறை கொண்டவர்களினதும் பயன்பாட்டுக்காக முகாமைத்துவக் கணக்கியல் மற்றும் சார்புடைய பாடங்கள் தொடர்பிலான அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களினதும் நூல்களினதும் சஞ்சிகைகளினதும் நூலகமொன்றைப் பேணுதல் ;

(ங) முகாமைத்துவக் கணக்கியல் தொடர்பிலான நூல்களி னதும் பருவ வெளியீடுகளினதும் வெளியீட்டை ஊக்கு வித்தல் ;

(ச) முகாமைத்துவக் கணக்கியல் துறையில் சிறந்து விளங்கு பவர்களுக்கு புலமைப் பரிசில்களையும் விருதுகளையும் பரிசுகளையும் வழங்குதல் ; அத்துடன்

(ஞ) நிறுவகத்தின் உறுப்பினர்களுக்கும் நிறுவகத்தால் விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்று பவர்களுக்கும் திப்ளோமாக்களையும் சான்றிதழ்களை யும் வழங்குதல்.

நிறுவகத்தின் உறுப்பாண்மைக் கான தகுதிகள்.

**4.** பின்வரும் ஆட்கள் நிறுவகத்தின் உறுப்பாண்மைக்குத் தகுதி யுடையவர்களாதல் வேண்டும் :-

(அ) இச்சட்டத்தின்கீழ் பேரவையால் நடாத்தப்பட வேண்டிய நிறுவகத்தின் உறுப்பாண்மைக்குத் தகைமையளிக்கும் பரீட்சைகளில் சித்தியடைபவரும் பேரவையால் காலத் துக்குக்காலம் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய செயல்முறைப் பயிற்சியையுடையவருமான ஆளொருவர் ; அல்லது

(ஆ) எத்தன்மையதுமான பெயரினால் அழைக்கப்படுவதும் பேரவையின் அபிப்பிராயப்படி அத்தகைய கழகம் நிறுவனத்திற்குச் சமமான அந்தஸ்திலான கழக மொன்றாக இருக்கின்றதும் ஆன அப்போதைக்கான பேரவையால் ஆக்கப்பட்ட விதிகளால் அங்கீகரிக் கப்பட்டதும் ஏதேனும் உயர்தொழில்சார் கணக்காளர் குழுமத்தின் உறுப்பினரொருவராக இருக்கும் ஆளொருவர்.

*உறுப்பினர்களை வகுப்பாக்கம் செய்தல்.*

**5.** (1) நிறுவகத்தின் உறுப்பாண்மை சகபாடி உறுப்பினர்களையும் இணையுறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) மாணவர் ஒருவர் நிறுவகத்தின் எல்லாப் பரீட்சைகளையும் பூர்த்திசெய்து பேரவையால் விதித்துரைக்கப்படக்கூடியவாறு அங்கீகரிக்கப்பட்ட துறையொன்றில குறைந்தபட்சம் மூன்றாண்டு செயல்முறை அனுபவமொன்றைப் பெறுவதன்மீது பேரவைக்கு விண்ணப்பம் செய்யப்பட்டு விதித்துரைக்கப்பட்ட கட்டணம் பேரவைக்குச் செலுத்தப்படுவதன்மேல் நிறுவகத்தின் இணையுறுப்பினர் ஒருவராகப் பேரவையால் பதிவுசெய்யப்படுவதற்குத் தகுதியுடையவராதல் வேண்டும். அத்தகைய உறுப்பினர் நிறுவகத்தின் இணையுறுப்பினர் ஒருவராகப் பேரவையால் பதிவு செய்யப்படுவதன்மீது அவரது பெயரின் பின்னால் "ACMA" என்ற சேர்ப்பினைப் பயன்படுத்துவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(3) தாம், குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் சிரேஷ்ட முகாமைத்துறை அல்லது அதனையொத்த அனுபவத்துடன் ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாமல் ஒரு கணக்காளராக, முகாமைத்துறை ஆலோசகராக அல்லது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக உயர்கல்வி நிறுவகமொன்றில் ஒரு விரிவுரையாளராக இருந்துள்ளார் எனப் பேரவையைத் திருப்திப்படுத்துகின்றவரும் பேரவையால் விதித் துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேவைப்பாடுகளை நிறைவேற்றியுள்ளவருமான நிறுவகத்தின் உறுப்பினர் எவரும் நிறுவகத்தின் சகபாடி உறுப்பினர் ஒருவராகப் பேரவையால் பதிவுசெய்யப்படுவதற்குத் தகுதியுடையவராதல் வேண்டும். பதிவுசெய்யப்படுவதற்குத் தகுதியுடைய எவரேனும் ஆள், பதிவுசெய்யவென விண்ணப்பமொன்றை விதித்துரைக்கப்பட்ட கட்டணமொன்றுடன் சேர்த்துப் பேரவைக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். உறுப்பினர் ஒருவர் நிறுவகத்தின் உடனுறுப்பினர் ஒருவராக பேரவையால் பதிவுசெய்யப்படுவதன்மீது அவரது பெயரின் பின்னால் "FCMA" என்னும் சேர்ப்பைப் பயன்படுத்துவற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(4) நிறுவகத்தின் சகபாடி உறுப்பினர் ஒருவராக (3) ஆம் உட்பிரிவின்கீழ் பதிவுசெய்யப்படாதவரான நிறுவகத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் இணையுறுப்பினர் ஒருவராதல்

வேண்டும் என்பதுடன் அவர் ஓர் இணையுறுப்பினர் என்பதனைச் சுட்டிக்காட்டுவதற்கு அவரது பெயரின் பின்னால் "ACMA" என்னும் சேர்த்தலைப் பயன்படுத்துவதற்கு உரித்துரையவராதல் வேண்டும்.

(5) நிறுவகத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் "சான்றுப் படுத்தப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர் (CMA)" என்னும் சிறப்புப்பட்டத்தை எடுத்துப் பயன்படுத்துவதற்கு உரித்துடைய வராதல் வேண்டும்.

(6) நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக இல்லாத ஆளெவரும் "சான்றுப்படுத்தப்பட்ட முகாமைத்துறைக் கணக்காளர் (CMA)" என்ற சிறப்புப்பட்டத்தை அல்லது மேலே (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட சேர்த்தல் எதனையும் எடுத்தலோ அல்லது பயன்படுத்துதலோ ஆகாது.

*சிறப்புப் பட்டங்களினதும் அடையாளச் சின்னத்தினதும் பாவனை.*

**6.** (1) ஆளெவரும் 5 ஆம் பிரிவின்கீழ் தகுதியுடையவராக இருந்தாலன்றியும் நிறுவகத்தின் பேரவையால் எழுத்திலான அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தாலன்றியும் விவரணத்தினாலும் சரி குறுக்க வாசகத்தினாலும்சரி ஏதேனும் சிறப்புப் பட்டத்தை அல்லது நிறுவகத்தின் அடையாளச் சின்னத்தை எடுத்தலோ அல்லது பயன்படுத்தலோ ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

*நிறுவகத்தின் தத்துவங்களும், பிறவும்.*

**7.** நிறுவகமானது அதன் குறிக்கோள்களையும் கடமைகளையும் நிறைவேற்றுவதற்கு நியாயமாக அவசியமாகக்கூடியவாறான அத்தகைய தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், குறிப்பாக -

(அ) எத்தன்மையதுமான ஏதேனும் முறையில் ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளலாம், வைத்திக்கலாம், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுக்கலாம் அல்லது கொடுக்கலாம், ஈடுவைக்கலாம், அடைமானம் வைக்கலாம், விற்கலாம் அல்லது வேறு வகையில் கையுதிர்க்கலாம் ;

(ஆ) முகாமைத்துவக் கல்வி மற்றும் பயிற்சி நிலையங்களைத் தாபிக்கலாம் அத்துடன் தொழிற்படுத்தலாம் ;

(இ) முகாமைத் துறையின் எல்லா அம்சங்களையுமிட்டு ஆராய்ச்சி நடத்தலாம், துணைபுரியலாம், இயைபு படுத்தலாம் அத்துடன் ஊக்குவிக்கலாம் ;

(ஈ) அதன் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிக்கலாம், தொழிலுக்கமர்த்தலாம், அவர்களுக்கு ஊதியம் வழங்கலாம் அத்துடன் அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கலாம் ;

(உ) நிறுவகத்தால் ஆற்றப்பட்ட ஏதேனும் சேவைக்குக் கட்டணங்களை அல்லது விதிப்பனவுகளை அறவிட லாம் ;

(ஊ) நிறுவகத்திற்கு ஆற்றப்படும் எவையேனும் சேவைக ளுக்கு கட்டணங்களை அல்லது விதிப்பனவுகளைச் செலுத்தலாம் ;

(எ) நிறுவனத்தின் நோக்கங்களுக்குத் தேவைப்படுத்தப்பட்ட உபகரணங்களை இறக்குமதி செய்யலாம் ; அத்துடன் நிறுவகத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு உபகரணங்களையும் நிதிகளையும் மற்றும் வேறு ஏதேனும் உதவியையும் பெறலாம் ;

(ஏ) நிறுவகத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு ஆளணியினரின் சேவைகளைப் பெறலாம் ;

(ஐ) அதன் சொந்த ஆளணியினருக்கு வேலை செயற்பாட்டு நியமங்களைத் தாபிக்கலாம், அத்தகைய செயற்பாட்டை கணிப்பீடு செய்யலாம் அத்துடன் அதன்மீது நியாய மான நடவடிக்கையை எடுக்கலாம் ;

(ஒ) அதன் ஊழியர்களுக்கு நலன்புரி மற்றும் பொழுது போக்கு வசதிகளைத் தாபிக்கலாம் அத்துடன் பேண லாம் ;

(ஓ) அதன் அலுவலர்கள் மற்றும் சேவையாளர்கள் நியமனம், பயிற்சி, பதவியுயர்வு, ஊதியம், ஒழுக்காற்றுக் கட்டுப் பாடு, நடத்தை அத்துடன் லீவு வழங்குதல் உட்பட விதிகளை ஆக்கலாம் ;

(ஔ) நிறுவகத்தின் பொது நிர்வாகம் தொடர்பில் விதிகளை ஆக்கலாம் ;

(க) நிறுவகத்தின் உறுப்பினர்களுக்கு முகாமைத்துவக் கணக்கீட்டில் வழிகாட்டிகளையும் நியமங்களையும் வழங்கலாம் ;

(ங) வங்கிக் கணக்குகளை ஆரம்பிக்கலாம் அத்துடன் தொழிற்படுத்தலாம், பணத்தைக் கடனெடுக்கலாம், மானியங்களையும் நன்கொடைகளையும் பெறலாம், நிதிகளை முதலீடு செய்யலாம் ;

(ச) நிறுவகத்தின் புலமைச் சொத்து உரிமைகளைத் தற்காப்பு செய்யலாம் ; அத்துடன்

(ஞ) நிறுவகத்தின் முகாமைத்துவத்திற்கும் அதன் குறிக் கோள்களை எய்துவதற்கும் இச்சட்டத்தின் ஏற்பாடு களுக்கு ஒவ்வாதனவாக இராத விதிகளை ஆக்கலாம். இவ்விதிகள் ஆக்கப்பட்டவிடத்து அதன்கண் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் அவை மாற்றப்படலாம், அதனுடன் எதுவும் சேர்க்கப்படலாம், அது திருத்தப் படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

பேரவையின் அமைப்பு.

**8**. (1) நிறுவகத்தின் முகாமைத்துவம், கட்டுப்பாடு மற்றும் நிர்வாகம் என்பவற்றிற்குப் பொறுப்பாக ஆளும் பேரவையொன் றிருத்தல் வேண்டும். (இதனகத்துப்பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்)

(2) பேரவையானது -

(அ) நிறுவகத்தின் உறுப்பினர்களால் அதன் உறுப்பாண் மையிடையேயிருந்து தெரிவுசெய்யப்பட்ட தலைவர் மற்றும் ஒரு துணைத்தலைவர் ;

(ஆ) பின்வருவோர் அமைச்சரால் நியமிக்கப்படுதல் வேண் டும் :-

(i) இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அல்லது அவரது நியமத்தர் ;

(ii) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் தலைவர் அல்லது நிறுவகத்தின் பேரவையின் நடப்பு உறுப்பினர் ஒருவராகவுள்ள அவரது நியமத்தர் ; அத்துடன்

(iii) ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் கணக்கியல் பகுதியின் தலைவர் அல்லது அவரது நியமத்தர்.

(இ) நிறுவகத்தின் உறுப்பினர்களால் அதன் உறுப்பாண்மையிடையேயிருந்து தெரிவுசெய்யப்பட்ட மூன்று உறுப்பினர்கள்,

ஆகியோரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு உடன்முன்னரான நாளன்று பதவி வகிக்கும் சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் சங்கத்தின் பேரவை உறுப்பினர்கள் இதன்கண் தாபிக்கப்பட்ட நிறுவகத்தின் முதலாவது பேரவை உறுப்பினர்களாதல் வேண்டும் என்பதுடன் நான்கு ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவி வகித்தலும் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின் (அ) மற்றும் (இ) என்னும் பந்திகளின் நியதிகளின்படி உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல்கள் பேரவையின் விதிகளுக்கிணங்க நடாத்தப்படுதல் வேண்டும்.

**9**. (1) பேரவையின் உறுப்பினர் ஒவ்வொருவரும் அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலன்றி விடயத்திற்கேற்ப அவரது நியமனம் அல்லது தேர்தல் திகதியிலிருந்து இரண்டு ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும் : பேரவை உறுப்பினர்களின் பதவிக்காலம்.

ஆயின், எவ்வாறாயினும், 8 ஆம் பிரிவின் (3) உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்டு அவ்வுட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட திகதியிலிருந்து நான்கு ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதியின் முடிவில் பதவியிலிருக்கும் உறுப்பினர்கள் பதவியை வறிதாக்குதல் வேண்டும் ; ஆனால் மீளத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதல் வேண்டும்.

(2) பேரவை உறுப்பினர் ஒருவர் அதினின்று பதவி துறப்பதன் மூலம் அல்லது அவர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக இல்லாதொழிவாராயின் பதவியை வறிதாக்குதல் வேண்டும்.

(3) பேரவை உறுப்பினர் ஒருவர் இறக்கும் பட்சத்தில் அல்லது பதவியை வறிதாக்கும் பட்சத்தில் அத்தகைய உறுப்பினரின் இடத்திற்கு வேறோர் ஆள், 7 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க விடயத்திற்கேற்ப நியமிக்கப்படுதல் அல்லது தேர்ந்தெடுக்கப்படு தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய உறுப்பினரின் முடிவுறா தெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகித்தலும் வேண்டும்.

(4) காலம் கழிவதன்மூலம் பதவியை வறிதாக்கும் பேரவையின் உறுப்பினர் எவரும் உறுப்பினர் ஒருவராக மீள் நியமனத்திற்கு அல்லது மீளத்தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதல் வேண்டும்.

(5) பேரவையில் உறுப்பினர் ஒருவர் பேரவையால் மன்னிக்கப் பட்டால் அல்லது அத்தகைய உறுப்பினர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக இல்லாதொழிந்தாலன்றி தொடர்ச்சி யாகப் பேரவையின் மூன்று கூட்டங்களுக்கு சமுகமளிக்கத் தவறுவதன் மீது பதவியை வறிதாக்கியுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஏதேனும் வெற்றிடம் உள்ளது அல்லது உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் குறைபாடு உள்ளது என்ற காரணத்தால் நிறுவகத்தின் செயல்கள் அல்லது வழக்கு நடவடிக்கைகள் செல்லுபடியற்ற வையாகக் கருதப்படுதலாகாது.

**10**. பேரவையில் ஏதேனும் வெற்றிடம் உள்ளது அல்லது பேரவையின் எவரேனும் உறுப்பினரின் நியமனத்தில் குறைபாடு உள்ளது என்ற காரணத்தினால் மட்டும் நிறுவகத்தின் செயல் அல்லது வழக்கு நடவடிக்கைகள் எவையும் செல்லுபடியற்றவை யாகக் கருதப்படுதலாகாது.

மதியுரைச் சபையொன்றின் நியமனம்.

**11.** பத்துக்கு மேற்படாத மகிமைபெற்ற ஆட்களைக்கொண்ட மதியுரைச் சபையொன்றை இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாத காலப்பகுதியொன்றுக்கு நியமித்தல் பேரவைக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். பேரவை அதன் தற்றுணிபின்பேரில் மதியுரைச் சபையின் கருத்துக்களையும் மதியுரையையும் நாடலாம். ஆனால் எவ்விதத்திலும் அத்தகைய மதியுரையை ஏற்றுக்கொள்வதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு அது பிணிக்கப்படுதலாகாது.

நிறுவகத்தின் போஷகர்கள்.

**12.** பேரவையானது நிறுவகத்தின் போஷகர்களாக சேவையாற்றுவதற்கு சிறப்புப்பெற்ற உயர்தொழில் சார் பின்னணியையுடைய உள்நாட்டு அல்லது வெளிநாட்டு ஆட்களை காலத்துக்குக் காலம் அழைக்கலாம். அவர்கள் எவையேனும் பிரவேசக் கட்டணங்களை அல்லது ஆண்டு ஒப்பப்பணங்களைச் செலுத்துமாறு தேவைப்படுத்தப்படுதலாகாது.

உறுப்பினர்களின் வேதனம்.

**13.** பேரவையின் எல்லா உறுப்பினர்களுக்கும் அல்லது எவரேனும் உறுப்பினர்களுக்கும் நிறுவகத்தின் நிதியங்களிலிருந்து பேரவையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேதனம் செலுத்தப்படலாம்.

பேரவையின் கூட்டங்கள்.

**14.** (1) பேரவையின் கூட்டங்கள் குறைந்தபட்சம் மாதம் ஒருமுறை நடத்தப்படுதல் வேண்டும்.

(2) பேரவையின் ஒவ்வொரு கூட்டம் பற்றிய அறிவித்தலும் குறைந்தபட்சம் ஏழு நாட்களுக்கு முன்னர் உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் எழுத்தில் வழங்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய அறிவித்தல் அத்தகைய கூட்டத்தில் கையாளப்படவுள்ள அலுவல்களைக் குறித்துரைத்தலும் வேண்டும்.

(3) விசேட கூட்டமொன்றைக் கூட்டுமாறு பேரவையின் ஐந்து உறுப்பினர்களால் எழுத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்ட ஏழு நாட்களுக்குள் தலைவர் அத்தகைய கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும்.

(4) பேரவையின் பொதுக்கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் நேரிலோ அல்லது பதிலி மூலமாகவோ சமுகமாயிருக்கும் மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும்.

(5) பேரவையின் கூட்டமொன்றுக்கு வருகைதரும் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் பேரவையால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய தொகையில் கட்டணமொன்று அல்லது அத்தகைய கூட்டத்திற்கு வருகைதருவதில் உறப்பட்ட எவையேனும் செலவினங்களின் செலவீடு செலுத்தப்படுதல் வேண்டும்.

(6) பேரவையின் கூட்டங்களுக்கு தலைவர் தலைமைதாங்குதல் வேண்டும் என்பதுடன் பேரவையின் ஏதேனும் கூட்டத்தில் தலைவர் இல்லாதவிடத்து சமுகமாயிருக்கும் உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரால் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர் ஒருவர் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குதலும் வேண்டும்.

(7) தலைவர் சுகயீனம் காரணமாக அல்லது வேறு பலயீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாதிருப்பதன் காரண மாக அவரது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாக நிறை வேற்ற இயலாதிருப்பாராயின் பேரவை அவரது இடத்திற் பதிற் கடமையாற்றுவதற்கு உறுப்பினர்களுள் ஒருவரை நியமிக்க லாம்.

(8) பேரவையின் கூட்டமொன்றில் தீர்மானிக்கப்படும் ஏதேனும் விடயத்தின் அல்லது கருமத்தின்மீது வாக்குகள் சரிசமமாக இருக்குமிடத்து அத்தகைய கூட்டத்தின் தலைவர் அவரது சொந்த வாக்கிற்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றையும் உடைய வராதல் வேண்டும்.

(9) இதன்கண் அடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கமைய பேரவை யானது அதன் அலுவல்களை நிறைவேற்றுவதற்கான சொந்த நடவடிக்கைமுறைகளைத் தீர்மானிக்கலாம்.

## பாகம் II

### நிறுவகத்தின் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் நியமனம்

**15.** (1) பேரவை நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு பிரதம நிறைவேற்று அலுவலர் ஒருவரை நியமிக்கலாம். இவர் நிறுவகத்தின் அலுவல்களை நிர்வகித்தல் வேண்டும்.

*நிறுவகத்தின் பிரதம நிறைவேற்று அலுவலரின் நியமனம்.*

(2) பிரதம நிறைவேற்று அலுவலர் அவருக்குக் கையளிக்கப் படக்கூடியவாறான அத்தகைய தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் புரிதலும் வேண்டும்.

(3) பேரவை (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பிரதம நிறை வேற்று அலுவலரை பதிவிலிருந்து அகற்றலாம்.

(4) பிரதம நிறைவேற்று அலுவலருக்கு பேரவையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேதனம் செலுத்தப் படலாம்.

**16.** (1) இச்சட்டத்தின் வேறு ஏற்பாடுகளுக்கமைய பேரவையானது–

*நிறுவகத்தின் பணியாட் டொகுதிக்கான நியமனங்கள் தொடர்பில் நிறுவகத்தின் தத்துவங்கள்.*

(அ) நிறுவகத்தின் நோக்கங்களுக்கு அவசியப்படக்கூடியவாறான அத்தகைய வேறு அலுவலர்களையும் சேவையாளர்களையும் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு நியமிக்கலாம் ;

(ஆ) நிறுவகத்தின் பணியாட்டொகுதியை விலக்கலாம் என்பதுடன் அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டையும் பிரயோகிக்கலாம் ;

(இ) பணியாட்டொகுதிக்கு ஊதியங்களை அல்லது சம்பளங்களை அல்லது வேறு வேதனத்தை நிர்ணயிக்கலாம் ;

(ஈ) அத்தகைய பணியாட்டொகுதியின் சேவை நியதி நிபந்தனைகளைத் தீர்மானிக்கலாம் ; அத்துடன்

(உ) அத்தகைய பணியாட்டொகுதியின் நலனுக்கு சேமநல நிதியங்களையும் செயற்திட்டங்களையும் தாபித்து ஒழுங்குபடுத்தலாம் என்பதுடன் அத்தகைய ஏதேனும் நிதியத்திற்கு அல்லது செயற்திட்டத்திற்கு உதவுதொகைகளையும் செலுத்தலாம்.

(2) விதிகளை (1) ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட எவை யேனும் ஒன்று அல்லது எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் ஆக்க லாம்.

*நியமனங்கள் தொடர்பில் பேரவையின் தத்துவங்களை பிரதம நிறைவேற்று அலுவலருக்குக் கையளித்தல்.*

**17.** (1) பேரவையானது நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு அலுவலர்களின் அல்லது சேவையாளர்களின் நியமனம் தொடர்பில் அதன் தத்துவங்கள் எவற்றையும் பிரதம நிறைவேற்று அலுவலருக்குக் கையளிக்கலாம். பிரதம நிறைவேற்று அலுவலருக்குக் கையளிக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் அவரால் நியமிக்கப்பட்ட உயர்தொழில் பணியாட்டொகுதி உறுப்பினர் எவரினதும் வேதனம் உட்பட தொழில் நிபந்தனைகள் பேரவை யின் அங்கீகாரத்துடன் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் பிரதம நிறைவேற்று அலுவலரை அல்லது எவரேனும் அலுவலரை அல்லது உயர்தொழில் பணியாட் டொகுதியின் எவரேனும் உறுப்பினரை பதவி விலக்குதலானது அது பேரவையால் அங்கீகரிக்கப்பட்டான்றிப் பயனுறுதலாகாது.

*கடமைகளைத் தீர்மானித்தல்.*

**18.** பிரதம நிறைவேற்று அலுவலர் பேரவையுடனான ஒருப் பாட்டுடன் நிறுவகத்தின் அலுவலர்களினதும் சேவையாளர்களி னதும் கடமைகளைத் தீர்மானித்தல் வேண்டும்.

*விதிகள்.*

**19.** (1) பேரவை பின்வருவன தொடர்பில் விதிகளை ஆக்க லாம் :-

(அ) உறுப்பாண்மையின் வகுப்பாக்கம் ஒவ்வொரு வகுப்பைச் சேர்ந்த உறுப்பினர்களாலும் செலுத்தப் படற்பாலதான கட்டணங்கள், அவர்களை அனுமதித் தல், பதவி விலகுதல், அவர்களைப் பதவி விலக்குதல், உறுப்பாண்மைக் கட்டணங்கள் செலுத்தாமை அல் லது பதவி துறத்தல் ;

(ஆ) நிறுவனத்தின் அலுவலர்கள் முகவர்கள் மற்றும் சேவையாளர்களின் நியமனம் தொழிலிலமர்த்துதல் மற்றும் பதவி நீக்கல், அவர்களது தத்துவங்கள், கடமைகள், பணிகள், நடத்தைகள், ஊதியக் கொடுப் பனவு மற்றும் சேமலாபநிதியங்களின் ஒழுங்குபடுத்தல் களும் அவர்களின் நலன்மைக்கான வேறு செயற்றிட்டங் களும் ;

(இ) மாணவர் பதிவுக்கட்டணங்கள், ஆண்டு உதவுதொகைகள், பரீட்சைக் கட்டணங்கள், விரிவுரைக் கட்டணங்கள், கல்விப் புத்தகங்களின் விலைகள் மற்றும் வேறு வெளியீடுகளின் விலைகளை நிர்ணயித்தல் ;

(ஈ) விசேடமான விடயங்களைக் கையாள்வதற்கு நிறுவனத்தின் உறுப்பினர்களைக் கொண்டமைந்த பேரவையின் குழுக்கள் மற்றும் உப குழுக்களை நியமித்தலும் அத்தகைய குழுக்களின் பணிகளை ஒழுங்குபடுத்துதலும்;

(உ) நிறுவனத்தினுடைய ஆதனத்தின் நிர்வாகமும் முகாமைத்துவமும் ;

(ஊ) பேரவையின் பதவிதாங்குநர்களின் தெரிவு, அவர்கள் பதவியை வறிதாக்குதல், பதவியிலிருந்து அகற்றப்படுதல், பதவி துறத்தல் அவர்களது தத்துவங்கள், கடமைகள் அத்துடன் அவர்களது நடத்தைகள் ;

(எ) பேரவையினதும் நிறுவகத்தினதும் ஆண்டுப் பொதுக்கூட்டங்களையும் அதிவிசேட கூட்டங்களையும் கூட்டுதலிலும் நடத்துதலிலும் வெற்றிடங்களை நிரப்புதலிலும் கடைப்பிடிக்கப்படவேண்டிய நடைமுறை, அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்கள், அவற்றின் நிகழ்ச்சி நிரல்கள், அவற்றிற்கான நிகழ்ச்சி நிரல் அத்துடன் அவற்றின் அலுவல்களை நடாத்துதல்;

(ஏ) பேரவையினதும் நிறுவகத்தினதும் உறுப்பாண்மைக்கான தகைமையும் தகைமையீனங்களும் ;

(ஐ) ஒழுக்காற்றுக் குழுக்களை ஏற்படுத்துதலும் ஒழுக்க நெறிக் கோவையை வகுத்துத் தொகுத்தலும், உறுப்பினர்கள் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் ஒழுக்காற்று நடைமுறையும் அத்துடன் உறுப்பினர்களைப் பதவி விலக்கலும் உறுப்பாண்மையை இடைநிறுத்துதலும் ; அத்துடன்

(ஒ) சா.மு.க. நிகழ்ச்சித் திட்டத்திற்கு மாணவர்களைச் சேர்ப்பதற்கான பிரவேச மூலப்பிரமாணம்.

(2) பத்தொன்பதாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியிலிருந்து (ஒ) என்னும் பந்தி வரையான பந்திகளின் கீழ் பேரவையால் ஆக்கப்பட்ட விதி ஒவ்வொன்றும் அமைச்சரால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதி ஒவ்வொன்றும் வர்த்த மானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

## பாகம் III

## *நிதி*

*நிறுவகத்தின் நிதியம்.*

**20.** (1) நிறுவகம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) நிறுவகத்தால் அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கையிலும் நிறைவேற்றுகையிலும் புரிகையிலும் அதனால் பெறப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும் நிறுவகத்தின் நிதியத்தில் வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

(3) பேரவை இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட்ட அல்லது உத்தரவாதமளிக்கப்பட்ட எவையேனும் பிணையங்களில் நிதியத் தின் பணங்களை முதலீடு செய்யலாம்.

(4) பேரவை இலங்கையிலுள்ள ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் அல்லது வங்கிகளில் அழைப்பு, நடைமுறை, சேமிப்பு அல்லது வைப்புக்கணக்குகளைப் பேணலாம்.

(5) நிறுவகத்தின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கையிலும் நிறைவேற்றுகையிலும் புரிகை யிலும் அதனால் உறப்பட்ட செலவை ஈடுசெய்வதற்குத் தேவை யான எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து அறவீடு செய் யப்படுதல் வேண்டும்.

*நிறுவகத்தின் நிதியாண்டு.*

**21.** நிறுவகத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண் டும்.

கணக்குகளின் கணக்காய்வு.

**22.** (1) நிறுவகம் அதன் வருமானம், செலவினம், சொத்துக்கள், பொறுப்புக்கள் அத்துடன் நிறுவகத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய தகுந்த கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் கணக்குகள் ஆண்டுதோறும் நிறுவகத்தால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது-

(அ) இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடையவருமான ஆள் ஒருவர் எனப் பொருளாகும் ; அல்லது

(ஆ) எந்தக் கணக்காளர் குழுமமொன்றின் ஒவ்வொரு வதிவுள்ள பங்காளரும் இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவிருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடையவராகவும் இருக்கின்றாரோ அந்தக் கணக்காளர் குழுமம் ஒன்று எனப் பொருளாகும்.

ஒப்பந்தங்கள்.

**23.** (1) நிறுவகத்தின் சார்பிலான ஏதேனும் ஒப்பந்தம் பின்வருமாறு செய்யப்படலாம் :-

(அ) தனிப்பட்ட ஆட்களுக்கிடையே செய்யப்பட்டு எழுத்திலிருத்தல் வேண்டும் என சட்டத்தால் தேவைப்படுத்தப்படின் நிறுவகத்தின் சார்பில் நிறுவகத்தின் பொது இலச்சினையின்கீழ் எழுத்தில் செய்யப்படலாம்;

(ஆ) தனிப்பட்ட ஆட்களுக்கிடையே செய்யப்பட்டு எழுத்திலிருத்தல் வேண்டும். அது பொறுப்பாக்கப்பட்ட தரப்பினரால் கையொப்பமிடப்படும் என சட்டத்தால் தேவைப்படுத்தப்படின் அதற்கென நிறுவகத்தால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளி னால் அல்லது ஆட்களினால் நிறுவகத்தின் சார்பில் செய்யப்படலாம் ;

(இ) தனிப்பட்ட ஆட்களுக்கிடையே செய்யப்பட்டு எழுத்தில் வடிக்கப்படாமல் வாய்மொழியாக செய்யப் பட்டபோதிலும் சட்டத்தால் செல்லுபடியானால் அதற் கென நிறுவகத்தால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் அல்லது ஆட்களினால் நிறுவ கத்தின் சார்பில் வாய்மொழியாக செய்யப்படலாம்.

(2) இப்பிரிவிற்கிணங்க செய்யப்பட்ட ஒப்பந்தமொன்று சட்டத்தில் பயனுறுதல் வேண்டும் என்பதுடன் நிறுவகத்தையும் அதற்கான எல்லா ஆட்களையும் அவர்களது சட்டப் பிரதிநிதி களையும் பிணித்தலும் வேண்டும்.

நிறுவகத்தால் உறப்பட்ட செலவுகளை அறவிடுதல்.

**24.** நிறுவகத்தினால் அல்லது அதற்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் கொணரப்பட்ட எதேனும் குற்றவழக்கில் அல்லது துடர்ச்சியில் நிறுவகத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவு, நிறுவகத்தின் நிதியங்களிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் ஏதேனும் குற்றவழக்கில் அல்லது துடர்ச்சியில் நிறுவகத்தால் அறவிடப்படுவதற்கெனச் செலுத்தப்பட்ட ஏதேனும் செலவு தொகை நிறுவகத்தின் நிதியத்தில் வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

இச்சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட செயல்கள் அல்லது நிறுவனத்தின் பணிப்புகளுக்கான பாதுகாப்பு.

**25.** (1) குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கைகள் எவை யும் –

(அ) இச்சட்டத்தின்கீழ் நிறுவகத்தினால் நன்நோக்குடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப் பட்ட எச்செயலுக்காகவும் நிறுவகத்துக்கெதிராக ; அல் லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது விடயத்திற்கேற்றாற்போல் பேரவையின் பணிப்புகளின்மீது அத்தகைய உறுப்பினர், அலுவலர், சேவையாளர் அல்லது முகவரினால் நன்நோக்குடன் செய்யப்பட்ட அல்லது செய்துகொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காக எவரேனும் உறுப்பினருக்கு, அலுவலருக்கு, சேவையாளருக்கு அல்லது முகவருக்கு எதிராக,

தொடுக்கப்படுதல் ஆகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னால் அத்தகைய ஆளுக்கெதிராகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் ஒராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட எவரேனுமாளினால் இச்சட்டத்தின்கீழ் அல்லது பேரவையின் பணிப்புகளின்மீது செய்யப்பட்ட ஏதேனும் செயலுக்காக உறப்பட்ட ஏதேனும் செலவினம் அத்தகைய செயல் நன்நோக்குடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்மானித்திருப்பின் நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**26.** நிறுவகத்திற்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் வழக்கில் பேரவையின் உறுப்பினர் ஒருவரின் ஆளுக்கு அல்லது ஆதனத்திற்கெதிராக எழுத்தாணை எதுவும் வழங்கப்படுதலாகாது. *பேரவையின் உறுப்பினர் ஒருவரின் ஆளுக்கு அல்லது ஆதனத்திற்கெதிராக எழுத்தாணை எதுவும் வழங்கப் படுதலாகாது.*

**27.** இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்ற ஒவ்வொராளும் நீதிவானரொருவர் முன்னிலையில் விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஆறு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஐந்நூறு ரூபாவை விஞ்சாத ஒரு குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும். *தவறுகளும் தண்டங்களும்.*

**28.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்